விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka ★ ★

ஈழநாடு

ஏடு 16 The Eelanadu இதழ் 161

[illegible] ஆடி 8 றஜப் 4 புதன்கிழமை 24-7 74

JAFFNA COLLEGE ★ UNDERGRADUATE LIBRARY ★
24 JUL 1974

நவீன கணிதம்

(தபால் மூலம்)

குறைந்த செலவில், சிறந்த முறை [illegible] 6-ம், 7-ம், 8-ம் வகுப்பு மாணவருக்கும், [illegible] கல்வித்தராதர வகுப்பினருக்கும் [illegible] ஆசிரியர்களுக்கும், ஆசிரிய [illegible] மாணவர்களுக்கும் [illegible] மூலம் [illegible] நடாத்தப்படுகிறது. [illegible] நடைபெறும் வகுப்புகள் [illegible] 8 மணி வரை நடைபெறும் [illegible] விபரங்களுக்கு:-

மொடேர்ன்
எட்யூகேஷன் சென்ரர்
நெல்லியடி—கரவெட்டி

இந்தியமீனவரும்யாத்திரிகரும் கச்சதீவுவர விசா தேவையில்லை

பிரதமர் சிறிமா அறிவிப்பு

கொழும்பு, செவ்.

கச்சதீவுக்கு இந்திய மீனவர்களும் யாத்திரிகர்களும் பாஸ்போர்ட்டோ, விசாவோ இல்லாமல் வழமை போல் வந்துசெலலாம்.

இந்த விபரத்தை இன்று தேசிய அரசுப்பேரவையில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இந்தியாவுடன் இலங்கை கச்சதீவு சம்பந்தமாகச் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரதியைச் சமர்ப்பித்து பேரவையில் வெளியிட்டார்.

இதே சமயம் இந்திய ஆட்சிமன்றத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண் சிங்கும் உடன்படிக்கையின் பிரதியை சமர்ப்பித்துப் பேசுகையில் இதே விபரத்தை வெளியிட்டார்.

கச்சதீவு சம்பந்தமாக இலங்கையும் இந்தியாவும் செய்துகொண்ட உடன்படிக்கையை அங்கீகரிப்பதற்காக தேசிய அரசுப்பேரவை இன்று விசேஷமாகக்கூடுவது.

பிரதமர்வர ஏற்பட்ட தாமதம்

பேரவை இன்று பிற்பகல் சரியாக இரண்டு மணிக்குச் சபாநாயகர் தலைமையில் கூடியபோது நிகழ்ச்சிநிரலில் உள்ள விஷயங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த அலுவல்கள் முடிந்தும் பிரதமர் வரத் தாமதமேற்பட்டதால் சபைமுதல்வர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் ஆலோசனையின்மீது சபைக் கூட்டம் பதினைந்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதன் பின்னர் பிரதமர் வந்துசேர்ந்தார்.

கச்சதீவுசம்பந்தமாக இந்தியாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரதியை சபையில் சமர்ப்பித்து பிரதமர் சுமார் அரைமணிநேரம் பேசினார்.

இந்திராவுக்கு நன்றி

பலத்த கரகோஷத்தின் மத்தியில் பேசஎழுந்த பிரதமர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் நல்லெண்ணம், நட்புறவு, நிலைமையை உணர்ந்துகொள்ளும் மனப்பான்மை ஆகியவைகளுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். இந்தியவெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங்குக்கும் பிரதமர் பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.

நூற்றாண்டுக்கு மேலாகத் தீர்க்கப்படாமலிருந்த ஒரு பிரச்சினைக்குத் தீர்வுகண்டதில் பெருமிதமடைவதாகக் கூறிய பிரதமர் திருமதி சிறிமா நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் செய்துள்ள இச்சேவையை சரித்திரம் சொல்லும் என்றார்.

கலரியில் தூதுவர்

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு கேவல் [illegible]வும் திருமதி கேவல் [illegible]வும் துணைத் தூதுவரும் பாரியாரும் பேரவையின்

(4ம் பக்கம் பார்க்க)

'தனியார் கூப்பன் கடைகளை அரசு சுவீகரிக்க வேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

தனிப்பட்ட வியாபாரிகளின் கூப்பன் கடைகளை சுவீகரித்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடபிரதேச சமசமாஜ வாலிபர் சங்கச் சம்மேளன ஆண்டு மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

வாலிபர் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேறின.

காணி உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நெற்காணியைப் போல் மற்றைய காணிகளும் 5 ஏக்கர் உச்சவரம்பாக இருக்க வேண்டும்.

பரமேஸ்வராக் கல்லூரியில் யாழ். வளாகத்தை அரசாங்கம் அமைப்பதற்கு முன்வந்ததையிட்டுப் பாராட்டும் அதே நேரத்தில் விஞ்ஞான பீடம் அமைப்பதற்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை கட்டாயம் சுவீகரிக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதில் 50% திறமை அடிப்படையிலும், 50% தொழிலாளர், விவசாயிகளுக்கு விசேட சலுகை அளிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இலஞ்சம், ஊழல், கறுப்

(3ம் பக்கம் பார்க்க)

மீண்டும் சண்டை

நிக்கோஸியா, ஜூலை 23

சைப்பிரசில் யுத்தநிறுத்தம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும் இன்று மீண்டும் சைப்பிரஸ் தலைநகரில் சண்டை நடைபெற்றது.

பிரபுத்துவ ஆட்சி முடிந்தது

புதுடில்லி, ஜூலை 23

சிக்கிமில் 300 ஆண்டு கால பிரபுத்துவ ஆட்சி முடிவுக்கு வந்தது.

கதிர்காமம் பலாத்கார வழக்கு:

சாட்சி தெய்வானை கோட்டில் மயங்கி விழுந்தார்

காலி, செவ்.

கதிர்காமம் பலாத்கார வழக்கில் சாட்சியமளித்த இராமையா தெய்வானை என்ற 20 வயதுத் தமிழ்ப் பெண் சாட்சிக்கூண்டில் மயங்கி விழுந்ததால் விசாரணை பின்போடப்பட்டது.

இவ்வழக்கு காலி மேல் நீதிமன்ற நீதவான் திரு. சிசிகுணவர்த்தன முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இராமையா தெய்வானை சாட்சியமளித்தபின் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏட்லி பெரேராவினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அச்சமயம் அவர் திடீரென மயங்கி விழுந்தார். இதனால் விசாரணை சுமார் ஒரு மணி நேரம் பின்போடப்பட்டது. நீதவானின் வேண்டுகோளின்படி காலி வைத்திய அதிகாரி டாக்டர் எல். தர்மசேகரா நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டார். தெய்வானையைப் பரிசோதனை செய்தபின் அவர் வலிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதாக டாக்டர் தெரிவித்தார்.

நல்லூருக்கு நகை அணிந்து வராதீர்!

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. திருவிழாவுக்கு வரும் பெண்கள் நகைகள் அணிந்து வரவேண்டாமென்றும் பெண்கள் பாதுகாப்புடன் வரவேண்டுமென்றும் நல்லூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. வைரவப்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வழக்கம்போல் வீதியோரங்களில் இம்முறை கடைகள் அனுமதிக்கப்படவில்லை. தனியான ஒருபகுதியில் இம்முறை மாநகரசபை கடைகளை அமைத்துள்ளது. இதனால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் எவ்வித கஷ்டமோ, நெருக்கடியோ இல்லாமல் கோவிலுக்குச்செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது.

தனியாக அமைக்கப்பட்டுள்ள கடைப்பகுதியிலும், ஒரு பொலிஸ் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

கோவில் வீதிகளில் வழக்கமாக நடைபெற்று வந்த கடைகளைவிட புத்தக எவரும் கடைகள் அமைக்க அனுமதி வழங்கப்படவில்லை.

இரவு பகலாகக் கோவில் பகுதியில் சுகாதார வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. கோவிலின் நான்கு திசைகளிலும் பல தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. [அ]

தச்சன்தோப்பில்

இளம் பெண்ணின் மரணத்தில் மர்மம்!

யாழ்ப்பாணம், புதன்

தச்சன்தோப்பில் மர்மமான முறையில் மரணமான ராஜேஸ்வரி என்ற 24 வயது இளம்பெண்ணின் உள் உறுப்புகள் பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இன்று இம்மரணம் சம்பந்தமாக புலன் விசாரணை நடத்த தச்சன்தோப்புக்கு யாழ்ப்பாணம் விசேஷ பொலிஸ் பிரிவினர் செல்லவிருக்கின்றனர்.

தச்சன்தோப்பைச் சேர்ந்த இராமலிங்கம் மனைவி ராஜேஸ்வரியின் சடலம், இரு தினங்களுக்குமுன் அங்குள்ள வேப்பமரம் ஒன்றின் கீழ் கண்டுபிடிக்கப்பட்டது.

சாவகச்சேரி வைத்திய அதிகாரி [illegible] பிரேத [illegible] விசாரணையில் சாட்சியமளித்தனர். இதைத் தொடர்ந்து உள் உறுப்புகளை பரிசோதனைக்கு அனுப்பும்படி தெரிவித்து, பகிரங்க தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. (க)

விசாரணை நடுவில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

நீர்வேலிக் கொலைவழக்கின் விசாரணைக்கு இடையில் நடுவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தில் நீதவான் சி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் நீர்வேலியில் நாகமுத்து கணேசு என்பவர் தம்பையா இராசுவைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணிகளான வி. அம்பலவாணர், என். பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் ஆஜரானார்.

விசாரணை நடுவில், ஜூரி சபையினர் விசாரணையை தொடர்ந்து நடத்த விரும்பாததினால் எதிரி விடுதலை செய்யப்பட்டார். (க-அ)

......

நாணயமதிப்புக் குறையாது

புதுடில்லி, ஜூலை 23

இந்தியாவின் நாணய மதிப்பைக் குறைக்கும் நோக்கம் இல்லையென்றும் கறுப்புப் பணத்தை வெளிக்கொண்டு வருவதற்கு அரசு வேறுவழிகளைக் கையாளுமென்றும் நிதி மந்திரி திரு சவான் இன்று ஆட்சிமன்றத்தில் கூறினார்.

வரி விளம்பரம்

சேவை

15% அல்லது 18% வட்டிக்கு உங்கள் பணத்தை பாதுகாப்பான வழியில் கொடுக்கும் முறைகளில் எங்களிடம் அறிந்து கொள்ளவும் பிராஜ்தன் என்ரப்பிரைசஸ், 213/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 302

தவறிவிட்டது

21-7-74 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீதர் படமாளிகையினுள் 7 மணி படக்காட்சியின் போது, படம் எடுக்கப்பட்ட கலர் பிலிம் ரோல் (35 M.M. Colour Film Roll) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீதர் படமாளிகை மனேஜரிடம் கொடுத்து சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும். 380

விற்பனைக்கு

திருவிழாக் காலங்களை முன்னிட்டு சைவத்தமிழருக்கு ஒர் நற்செய்தியாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. 'முறிகண்டிப்பத்து'. சதம் 30. 'நல்லூர் நாற்பது' ரூபா 1-00. பெறுமதிக்கு முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். எஸ். கிருஷ்ணசாமி, பெரியகடை, யாழ்ப்பாணம். 379

நீர் இறைக்கும் யந்திரம் விற்பனைக்குண்டு (மாக் 12 அக்கஸ் வில்லியஸ்) நேரில் வரவும். சண்முகம் வேலுப்பிள்ளை, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். 377

நல்ல நிலையிலுள்ள இங்கிலீஸ் பம்முடன் கூடிய ஜாப் தண்ணீர் இயந்திரம். 2500/- மேல் கேட்கவும். அரசராஜா கரேஜ், சாவகச்சேரி. 381

தேவை

பெற்ரோல் நிலையத்தில் கடமையாற்றக் கூடிய பம்பர் (Pumper) தேவை. நேரில் வரவும். செ. கருணாகரன் 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 378

ஏலவிற்பனை

கஸ்தூரி, அதிவிடயம், கெந்தகம், நெல்லிவற்றல் முதலிய பொருட்கள் உட்பட வேறுபல ஆயுர்வேதமருந்துகளும் பழைய குப்பை விருண்டிகள், வெயின்ற் தகரங்கள், தார்த் தகரங்கள், போத்தல்கள், நிலை, யன்னல், கதவுகள், கதிரைகள், மேசைகள், தட்டை ஓடுகள், ரீப்போக்கள் மற்றும் வேறு பொருட்களும் 26-7-74-ந் திகதி காலை 9.00 மணியளவில் இலவச ஆயுர்வேத வைத்தியசாலையிலும் 10-00 மணியளவில் பொதுக்களஞ்சியத்திலும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சித்திபெற்ற கேள்விக்காரர் பொருட்களின் கேள்வித் தொகையை உடன் செலுத்திப் பொருட்களை எடுத்துச்செல்லவேண்டும்.

க. சிவஞானம்.
பதில் ஆணையாளர்,
மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்,

பொதுக்களஞ்சியம்,
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19-7-74. 216

நினைவுதினம்

சுழிபுரம், செவ்.

சைவப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனாரின் 19-வது நினைவுதினம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 24-ந் திகதி பழைய மாணவர்களால் கொண்டாடப்படவுள்ளது. விழாவுக்கு இளைப்பாறிய யூனியன் கல்லூரி அதிபர் க. கிருஷ்ணபிள்ளை தலைமைவகிப்பார். (க)

"கிளிநொச்சிப் பகுதியை சுபிட்ச பூமியாக்குவோம்"

மானிப்பாயில் தபாலமைச்சர்

யாழ்ப்பாணம், புதன்

'சட்டத்தின் மூலம் தமிழரின் உரிமைகளைப் பெற்றுத்தரும்படி கேள்வி எழுப்பப்பட்டுவருகின்றது. எமது கட்சியில் இரண்டொருவர் எதிர்ப்புக் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தே இக்கேள்வி எழுப்பப்படுகின்றது. இதன் மூலம் இனப்பகைமையையும் குரோதத்தையும் ஏற்படுத்தி தமது பிழைப்பை நடத்தவே இத்தகைய சக்திகள் முற்படுகின்றன'

நேற்று முன்தினம் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் தபால்தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்கும், உடுவில் தொகுதி ஸ்ரீ ல. சு. கட்சி அமைப்பாளர் திரு. ஐ. விஜேசனுக்கும் அளிக்கப்பட்ட பொதுவரவேற்பின்போது அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்துவான் திரு. க. ந. வேலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'வட்டுக்கோட்டை எம்.பி. திரு. தியாகராசா எம்மோடு சேர்ந்து எமது கொள்கையை ஏற்று நடக்கும்வரை வட்டுக்கோட்டைத் தொகுதி அவருக்கே உரியது. நாம் அவரைக் கைவிடமாட்டோம்'

'கிளிநொச்சியில் பலர் காணியற்ற ஏழைகளாக இருக்கையில் இங்கிருந்து குடியேற்றவாசிகளாக அங்கு பலர் புகுத்தப்படுகின்றனர் கிளிநொச்சி, துணுக்காய் பகுதிகளுக்கு பாதயாத்திரையை மேற்கொள்ள முன்வாருங்கள் அந்தப் பூமியை செல்வம் கொழிக்கும், சுபிட்சமான பூமியாக பொருளாதார ரீதியில் வளர்த்தெடுப்போம்' என அமைச்சர் குறிப்பிட்டார்.

வட்டு. எம். பி. திரு. தியாகராசா, திரு. வி. பொன்னம்பலம், திருமதி சிவகுருநாதன் ஆகியோரும் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (தி. அ.)

விவசாய விழா

யாழ்ப்பாணம், புதன்

வடமராட்சி தம்பான் இளம் விவசாயிகள் கழக விவசாயப் பொருட்காட்சியும், விவசாய விழாவும் குப்பிட்டான் கற்பக விநாயகர் ஆலய வீதி அரங்கில், இன்று நடைபெறவிருக்கிறது.

தென்மராட்சிக் காரியாதிகாரி திரு ஆர். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடக்கும் இவ்விழாவில், மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. வி. சத்தியசாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இரவு நிகழ்ச்சிகளுக்கு மாவட்ட காணி அதிகாரி திரு. கே. ரி. சம்பந்தர் தலைமைவகிப்பார். உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. கந்தையா, திரு. வி. சந்திரபாலத்தன், திரு. கே. பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

வரணி கிராமசபைத் தலைவர் திரு. க. முருகேசு தலைமையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். (க)

……

இன்று

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயிலில் இன்று பகல் மகா சங்காபிஷேகமும் இரவு கருடவாகனத்தில் சுவாமி வீதிவலம் எழுந்தருளலும் நடைபெறும்.

0 0 0

ஆக்ராவிலுள்ள தயான்பாக் ஆசிரமத் தொண்டர் ஸ்ரீகிருஷ்ணானந்த இன்று மாலை 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் "ஆத்மஞானமும் விஞ்ஞானமும் ஆக்கும் அற்புதப் பேரருளாதார விருந்து" எனும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். சட்டத்தரணி த. சோமசுந்தரம் நிகழ்ச்சிக்குத் தலைமைவகிப்பார்.

0 0 0

வேதானந்த குருகுலத்தின் விஸ்தரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிவகுப்பு இன்று காலை வண்ணை வைத்தீஸ்வரர் தேவஸ்தானத்தில் முகாமையாளர் திரு. கந்தப்பச் செட்டியாரினால் தொடக்கிவைக்கப்படவிருக்கிறது. நியாய சிரோமணி க. சுப்பிரமணிய சாஸ்திரியார் பிரதம ஆசிரியராயிருந்து வகுப்பை நடத்துவார்.

……

நல்லூரில் விசேஷ பொலிஸ் அதிகாரி

ஆனைக்கோட்டை, செவ்.

நல்லூர் கந்தசாமி கோவிலின் உற்சவதினத்தை முன்னிட்டு விசேட பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரியாக திரு. வைரவப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். இப்பொலிஸ் நிலையத்தில் சுமார் 25 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் ஒரு சார்ஜன்டும் கடமையாற்றுவார்கள்.

தனியார்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புச்சந்தை ஆகியவற்றில் குற்றவாளிகள் என நிருபிக்கப்படுவோருக்குக் கூடிய தண்டனையாக மரணதண்டனை விதிக்கவும், அவர்களின் சொத்தைப் பறிமுதல் செய்யவும் [illegible] சட்டங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும். (க)

தங்கம்மாவுக்கு மேலும் ஒரு பட்டம் — அருள்மொழிச் செல்வி

மாவிட்டபுரம், செவ்.

சைவத்தமிழ் தொண்டாற்றும் சிவத்தமிழ்ச் செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவையைப்பாராட்டி மாவை யாதீனம் "அருள் மொழிச் செல்வி" என்னும்பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தையொட்டி 10 தினங்கள் தொடர்ந்து கந்தபுராண தொடர் விரிவுரையாற்றிவந்த பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு மேற்படி விரிவுரைப் பூர்த்தி விழாவிலன்றே அவரின் சேவையைப் பாராட்டி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

ஆலய பிரதமகுரு பிரம்ஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் மாவையாதீனத்தின் சார்பில் செல்வி தங்கம்மாவுக்கு 'அருள் மொழிச் செல்வி' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

இதையொட்டி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அனுப்பிய வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டதுடன் பண்டிதர் மு. குமாரசாமி, அதிபர் திரு. பி. சச்சிதானந்தம், சமயப் பேச்சாளர் திரு. ஆ. திருஞானசம்பந்தர் ஆகியோரின் பாராட்டுகளும் இடம்பெற்றன.



(செய்திகள் காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

தமிழ்ச்சேவை
24-7-74 புதன்

காலை 6-00 மங்கள இசை, 6-05 சைவ நற்சிந்தனை — சு. கிருஷ்ணபிள்ளை, 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-15 என். சண்முகரத்தினம் நல்லை முருகன் பாடல்கள் 6 40 அறிவிப்புகள், 6-50 திருப்பாசுரம் - ஜெகதாம்பிகை பரமநாதன், 7-00 மாமாங்கப்பிள்ளையார் தொகுப்புரை, 7-30 நாடுசெழிக்க நாமீட்டும் சாதனைகள், 7 35 சேர்ந்த இசை, வாத்தியம் இசைத்தட்டு). 8-15 முஸ்லீம் நிகழ்ச்சி.

மாலை 6-10 செய்தியின் பின்னணியில், 6-15 அறிவிப்புகள், 6-20 கத்தோலிக்கசிறுவர் நிகழ்ச்சி, 6-35 முன்னேற்றப்பாதையில் - நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளை விளக்கும் நிகழ்ச்சி, 7-02 பாட்டு வி. விஜயசிங்க, 7-30 உலகச்செய்திகள், 7-35 குன்றின் குரல், 8-02 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 அறிவிப்புகள், 9-30 இசைக்கச்சேரி [பாட்டு] என். சண்முகரத்தினம்.

——

ல. ச. ச. கட்சி வாலிப முன்னணி மகாநாடு

கொழும்பு, செவ்.

லங்காசமசமாஜக் கட்சியின் வாலிப முன்னணி வருடாந்தப் பொதுக்கூட்டமும் கருத்தரங்கும் ஆகஸ்ட்மாதம் 11-ம், 12-ம் திகதிகளில் மிகப் பிரமாண்டமான அளவில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர்களும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

கடந்த வருடத்திலும் பார்க்க இரண்டு மடங்காக இம்முறை வாலிப அங்கத்தவர்களின் தொகை அதிகரித்துள்ளதாகவும் நாடெங்கிலும் இருந்து 80 வாலிப முன்னணிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவித்தல்

17-7-74-ந் திகதி ஈழநாட்டில் பிரசுரமான ஏலவிற்பனவு விளம்பரத்தில் கடன்காரர் புங்கன்குளம், எஸ். [illegible] கடனின் ஒரு பகுதியை செலுத்தியமையால் வீடமைப்பு உதவி ஆணையாளர் உத்தரவின்படி 24-7-74ல் நடைபெறவிருந்த விற்பனை இத்தால் நிறுத்தப்படுகின்றது.

மு. நவரத்தினராசா,
ஏலவிற்பனையாளர்.
மண்டைதீவு. 217

மில்க்வைற் தாபனத்தாரின் வெளியீடான "த
என்ற புத்தகத்தின் முதற்பிரதியை பிரம்மஸ்ரீ
சீதாராம சாஸ்திரிகள் தொழிலதிபர் தி
கனகராசா விடம் இருந்து பெற்றுக்கொள்ளும் பெ
எடுத்தபடம்.

வடமாகாண ஆசிரியர்சங்க

பேச்சு, கட்டுரைப் போட்

முடிவுகள்

புங்குடுதீவு, செவ்.

வடமாகாண ஆசிரியர் சங்கம் அண்மையில் யாழ்ப்பாண மாவட்டரீதியில் நடத்திய கட்டுரை, பேச்சு, சங்கீதப் போட்டிகளின் முடிவுகள்:

ஆண்கள்: கட்டுரை (தமிழ்): வி. ரி. தமிழ்மாறன் (வைத்தீஸ்வரா - யாழ்.) பி. கந்தசாமி (சுழிபுரம் விக்ரோறியா) எஸ். நந்திகேசன் (பரியோவான்).

கட்டுரை (ஆங்கிலம்): பி. ஜே. செல்வரத்தினம் (பரியோவான்), எஸ். குருபரம் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஆர். ஜே. காசிநாதர் (பரியோவான்)

பெண்கள்: கட்டுரை (தமிழ்). பீ. கௌரிசங்கரி (இராமநாதன் கல்லூரி), என். மைதிலி (இராமநாதன் கல்லூரி] வி. பிரேமாவதி (யூனியன் கல்லூரி).

கட்டுரை (ஆங்கிலம்) ராஜதமயந்தி (வேம்படி), கே. ஜெயராணி (மகாஜனா), எஸ். மோகனகுமாரி இராமநாதன் கல்லூரி)

பேச்சு (தமிழ் : ஆண்கள்:

அதிமேற்பிரிவு: வா. சிவராசா உசன் இராமநாதன்), என். விக்கினேஸ்வரன் (யூனியன்கல்லூரி, பி. செல்வவடிவேல் (யாழ். இந்து).

மேற்பிரிவு: செ தனபாலசுந்தரம் (மகாஜனா), நா. சோதிநாதன் (மகாஜனா), சு. செபஸ்தியாம்பிள்ளை முருகேசன் (ம. வி).

மத்திய பிரிவு: நா. கமலநாதன் ([illegible] இந்து), இ செல்வகாந்தன் (மகாஜனா), அ. ஞானசுந்தரம் (மானிப்பாய் இந்து).

கீழ்ப்பிரிவு: என். இராசேந்திரம் (யாழ் இந்து), சுதாகர் (கொக்குவில் இந்து), க கங்காகதன் (விக்ரோறியா),

பெண்கள்: அதிமேற்பிரிவு: செ. இலகவதி (ஸ்கந்தவரோதயா), சு. கௌரி சங்கரி (மகாஜனா), எம். மனோன்மணி [மெதடிஸ்ற் ம. உ. ப.)

மேற்பிரிவு:

செ. கலாராணி (வேம்படி மகளிர் கல்லூரி), அ இராணி (மானிப்பாய் மகளிர்கல்லூரி) ந. சாந்தினி (மகாஜனா)

மத்திய பிரிவு:

இ தெய்வச்செல்வி (கொழும்புத்துறை) வி. சாந்தினி (வதிரி. திரு. இரு. கல்லூரி) அ. வசந்தா (வேம்படி
மகளிர் கல்லூரி)

கீழ்ப்பிரிவு

ஸ்ரீ. வதனி (வல்வை
பரா) இவாஞ்சலின் செ
துரை (பண்டத்தரிப்
லிர் கல்லூரி) ச. ம
(மெதடிஸ்ற்).

பேச்சு (ஆங்கிலம்)
ஆண்கள்
அதிமேற்பிரிவு:
ஜே. ஆர். ஜே. காசி
(பரியோவான்), ஆர்.
கனகராஜன் (பரியோ
ஏ. சிவகுமார் (மகாஜ
மேற்பிரிவு: பி.
குமார (மகாஜனா),
டபிள்யு. ஆர். சவரி
(சம்பத்திரசியார்),
ஞானபிரதீபன் (இந்து
மத்தியபிரிவு: என்.
வித்தியாசங்கர் (இ
எம், செல்வராஜ
யோவான், வி. நே
டிறிபேக்கல்லூரி.
கீழ்ப்பிரிவு: பீ. சப
பிள்ளை - பரியோவான்,
இரத்தினராசா - பரி
வான், ஜீ. நிதையானன்
றன்.
பெண்கள்:
அதிமேற்பிரிவு: எஸ்.
யாழ்ப்பாணக் கல்லூரி,
நிர்மலா வட்டு / இ
எஸ். சாரதா, கே. ப
தினி - மானிப்பாய் மகளி
மேற்பிரிவு: எஸ். ரே
மகாஜனா, எஸ்.
ஜமாரி (மெதடிஸ்ற்) 3
தயாளினி (யூனியன் க
மத்தியபிரிவு: 1.
திரா (வேம்படி மகளிர்
சாந்தினி (மெதடிஸ்ற்
எஸ். அனுஷா (மகாஜ
கீழ்ப்பிரிவு: ஆர். ம
(மகாஜனா) எஸ். த
(உடுவில் மகளிர்)
பிலிப் (திருக்குடும்பக்
யர் மடம்)
தனித்துப்பாடல்
ஆண்கள்: கீழ்ப்பிரி
கண்ணன் (சோமஸ்
த. வெங்கடரமணன்
ந்தா) தி. ரவீந்திரன் (பு
ஆ. பா)
மேற்பிரிவு: சு. அரு
நாதன் (மகாஜனா) வி
நாதன் (மாகஜனா) இ
கரன் (யாழ், இந்து)
பெண்கள்: கீழ்ப்ப
பொ. குணலட்சுமி
கச்சேரி (இந்து), சு.
ணிலா (யூனியன் கல்
த. திருச்செல்வி
டிஸ்ற்)
மேற்பிரிவு: ஆர்.

வெளியீடான "துளசி"
பிரம்மஸ்ரீ இ. இ.
அதிபர் திரு. க.
கொள்ளும் பொழுது

ங்க

ப் போட்டி முடிவுகள்

கல்லூரி)
ப்பிரிவு
வதனி (வலிவை தெம்
லெவாஞ்சலின் செல்வத்
(பண்டத்தரிப்பு மக
கல்லூரி) ச. மஞ்சுளா
டிஸ்ற்)
பச்ச (ஆவிலம்)
ளைகள்
மேற்பிரிவு:
ஆர். ஜே. காந்திநாதர்
பவான்), ஆர். எஸ்.
ராஜன் (பரியோவான்)
வகுமார் (மகாஜனா)
ப்பிரிவு: பி. ரமேஷ்
(மகாஜனா), இ.
யு. ஆர். சவரிமுத்து
த்திராசிரியார்), எஸ்
பிரதீபன் (இந்து)
தியபிரிவு: எஸ். அ
மோகன்சங்கர் (இந்து),
செல்வராஜா - பரி
வன், வி. நேசராஜ்-
க்கல்லூரி.
ப்பிரிவு: பி. சபாபதிப்
- பரியோவான், எம்
இராசா - பரியோவா
ஜீ. நிதையாளன் சென்

கள்:
மேற்பிரிவு: எஸ். வதனி-
ப்பாணக் கல்லூரி, எஸ்.
வட்டு / இந்து.
சாரதா, கே. யாமாநந்
மானிப்பாய் மகளிர்.
த்பிரிவு: எஸ். ரேணுகா-
ஜன, எஸ். மங்கள
(மெதடிஸ்ற்) 3. ஆர்.
ளினி (யூனியன் கல்லூரி)
கிழ்பிரிவு: 1. பி. இந்
(வேம்படி மகளிர்) 2. பி
னி (மெதடிஸ்ற்) 3.
அனுஷா (மகாஜனா)
ப்பிரிவு: ஆர். மலர்விழி
ஜனா) எம். துஷ்யந்தி
வில் மகளிர்) எம். ரி.
(திருக்குடும்பக் கன்னி
டம்)
தனித்துப்பாடல்
ண்கள்: கீழ்ப்பிரிவு: ப.
னன் (சோமஸ்கந்தா)
வெங்கடரமணன் (ஸ்க
) இ. ரவீந்திரன் (புனோலி
)
ற்பிரிவு: சு. அருள்மணி
ன் (மகாஜனா) வி. ஐம்பு
ன் (மகாஜனா) இ. சுதா
(யாழ். இந்து)
ண்கள்: கீழ்ப்பிரிவு:
. குணலட்சுமி (சாவ
சரி (இந்து), சு. வெல்
(யூனியன் கல்லூரி),
ருமைச்செல்வி (மெத
)
த்பிரிவு: ஆர். பிரேம

ஜயந்தி (மெதடிஸ்ற்.), அ. அம்சவல்லி (இராமநாதன் கல்லூரி), ஆர். ஜெயராணி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

கூட்டுப்பாடல் ஆண்கள் பிரிவு: ஸ்ரீசோமஸ்கந்தா அருணோதயாக் கல்லூரி, புனோலி ஆண்கள் பாடசாலை.

மேற்பிரிவு: மகாஜனக் கல்லூரி, வரணி ம. வி., அருணோதயாக் கல்லூரி.

பெண்கள் கீழ்ப்பிரிவு: மகாஜனக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி யாழ்ப்பாணம்,

மேற்பிரிவு: வரணி ம. வி. இராமநாதன் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி.

சைப்பிரஸில் பூரண அமைதி நிலவுகிறதாம்

நிக்கோஷியா, ஜூலை. 23

சைப்பிரஸில் பூரண அமைதி நிலவுவதாகவும் போர்நிறுத்தம் நேற்றுமுதல் பூரணமாக அமுல் நடத்தப்படுவதாகவும் ஐ. நா. தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. போர் நிறுத்த உடன்பாடு அனுசரிக்கப்படுகின்றதா என கண்காணிக்க அமெரிக்கா அனுப்பி வைத்த அதிகாரிகளே இத்தகவலை ஐ. நா. விற்கு தெரிவித்துள்ளனர்.

ஆனால் நேற்று மாலை இலங்கை நேரப்படி 7-30 மணிக்கு போர் நிறுத்தம் செயல்பட ஆரம்பித்ததெனினும், துருக்கித் துருப்புகள் தரையிறங்குவதற்குத் தளங்களில்லையென்றும், தொடர்ந்தும் தரைச்சண்டை, விமானச் சண்டை தீவிரமடைவதாகவும் அவதானிகள் தெரிவித்த கூற்றை துருக்கி பலமாக மறுத்துள்ளது.

அதிகாரபூர்வமான போர் நிறுத்தம் அமுல் செய்யப்படும் பட்சத்தில் ஜெனிவாவில் சைப்பிரஸ் சமாதான மாநாடு ஒன்று நாளை நடக்க ஏற்பாடாகியுள்ளது.

இதேநேரத்தில் சைப்பிரஸ் முன்னாள் அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஹென்றி கிஸிங்கரைச் சந்தித்துப் பேசியுள்ளார். மீண்டும் இவர்கள் இக்கிழமை சந்திப்பார்கள்.

சங்கிலி வழிப்பறி: இளைஞர்கள் பொலிசில்!

நல்லூர், செவ்.

பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவியின் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிய வாலிபனை பொலிசாரும் பொதுமக்களும் துரத்திப் பிடித்தனர்.

நல்லூர் தெசவு ஆசிரிய பயிற்சிப் பாடசாலையில் கல்வி பயிலும் இம்மாணவி யாழ்ப்பாணத்திலிருந்து பாடசாலைக்கு வந்து கொண்டிருந்தபோது நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலின் முன்னால் இச்சம்பவம் நடைபெற்றது.

சயிக்கிளில் பின்பக்கமாக வந்துகொண்டிருந்த இந்த காற்சட்டை அணிந்த வாலிபன் திடீரென இம்மாணவியின் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடினான். மாணவி போட்ட கூக்குரலைக் கேட்டு ஓடிவந்த பொதுமக்கள் அவ்வழியால் வந்து கொண்டிருந்த பொலிஸ் எஸ். இராசரத்தினத்துடன் சேர்ந்து இரண்டு மைல் தூரம் துரத்திச் சென்று நீராவியடியில் வைத்து மடக்கிப்பிடித்தனர்.

இவ்விளைஞன் யாழ்ப்பாணம் இரும்புக் கடையொன்றில் வேலை செய்பவர் என்றும் பொலிஸாரும் பொதுமக்களும் இளைஞனைத் துரத்திச் சென்றபோது யாழ். இந்து மகளிர் கல்லூரி வளவுள் புகுந்து ஒளிக்க முற்பட்டாரென்றும் விசாரணையின்போது துரத்திச் சென்ற நல்லூர் பொலிஸ் எஸ். இராசரத்தினம் தெரிவித்தார்.

இளைஞன் கைது செய்யப்பட்டு நல்லூர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளான். இளைஞன் ஓடிவந்த வாடகைச் சயிக்கிளும் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

நேற்று முன்தினம் நல்லூர் வைமன் வீதியிலும் ஒருவருடைய சங்கிலியை நான்கு இளைஞர்கள் அறுத்துப்பறித்ததாகப் பொலிசில் செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து நான்கு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டு நல்லூர் பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம் ஈச்சமட்டையைச் சேர்ந்தவர்களென்று பொலிசார் தெரிவித்தனர்.

இளவாலைக் கிளை

பண்டத்தரிப்பு, செவ்.

யாழ்ப்பாண கத்தோலிக்க மறை மாவட்டத்தின் நான்கு கிளைகளுள் ஒன்றான இளவாலைக் கிளை கத்தோலிக்க ஆசிரியர்களின் சங்கம் இளவாலை புனித என்றியரசர் கல்லூரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மயிலிட்டி, ஏழாலை, சில்லாலை, இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய இடங்கள் இக்கிளை எல்லைக்குள் அடங்குவதால் மேற்படி பங்குக்குருவர்களும் ஆசிரியர்களும் கத்தோலிக்க சேவை அமைப்பாளர் வண. பிதா. சவுந்தரநாயகம் அடிகளார் தலைமையில் கூடி நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது. (அ)

எழுதுமட்டுவாளில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்

எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேச சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவைப் பரந்த அடிப்படையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிறது. இவ்விழாவின் முக்கிய அம்சமாக இரட்டை மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி இடம்பெறும். விழா அடுத்த மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் நடைபெறும்.

மற்றும் மரதன் ஓட்டம், ஒரு மைல் ஓட்டம், சிறுவர் விளையாட்டு நிகழ்ச்சிகள், விநோத உடைப்போட்டி, சங்கீதக்கதிரை முதலிய நிகழ்ச்சிகளும் விழாவையொட்டி நடைபெறும்.

அகில இலங்கை ரீதியில் நடைபெறும் இப்போட்டிகளில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் முதலிடம் பெறுபவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும். இதனை மிருசுவில் வி. ச. தலைவர் திரு. க. குலசேகரம்பிள்ளை வழங்குவார். 2-ம், 3-ம் இடங்களைப்பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்படும். (அ)

தொழில் நுட்ப நிலையம்

கொழும்பு, செவ்.

இலங்கை-ஜேர்மன் தொழில் நுட்பநிலையம் இன்று முதல் செயல்படவுள்ளது.

இ.போ. சபையின் தொழில் நுட்பப்பிரிவில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் புதிய "மெக்கானிக்" களை உருவாக்கவும் இந்நி[illegible] இங்குள்ளா[illegible] தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படும்.

நியமனம்

வண்ணார்பண்ணை, செவ்.

இலங்கை மீன்பிடி இலாகா ஆலோசனைச்சபை உறுப்பினராக யாழ். மாநகரசபை உறுப்பினரும், சமாதான நீதவானுமான திரு. எம். எஸ். பேரின்பநாயகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குநராகவும், யாழ். [illegible] வைத்தியசாலையின் கமிட்டி உறுப்பினராகவுமிருக்கும் திரு. பேரின்பநாயகம் வேறு பல சங்கங்களிலும் முக்கிய பதவிகளை வகிக்கிறார். [அ]

ரோமுக்குப் பயணமானார்

பண்டத்தரிப்பு, செவ்

யாழ்ப்பாண மேற்றிராணியார் மகா வந். பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை நேற்று முன்தினம் கட்டுநாயக்கா சர்வதேச விமானத்துறையிலிருந்து ரோமுக்குப் பயணமானார். சமூகமுன்னேற்றத்துக்கு திருச்சபை மேற்கொள்ளத்தக்க பல பொதுத்திட்டங்களையும் புனித ஆண்டின் விழாத்திட்டங்களையும் பற்றி ஆராய்வு நடத்தவிருக்கும் அகிலதிருச்சபை மேற்றிராணிமார் சங்கமேளனத்திற்கு இலங்கை மேற்றிராணிமார் சங்கப் பிரதிநிதியாக இவர் கலந்துகொள்வார். (அ)

பழைய மாணவர் வென்றனர்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை புனித என்றியரசர் கல்லூரித்தின விழாவில் கலந்துகொண்ட பழைய மாணவர் கோஷ்டிக்கும் கல்லூரி மேற்பிரிவு மாணவ கோஷ்டிக்குமிடையில் நிகழ்ந்த உதைபந்தாட்டத்தில் 4-3 கோல்கள் போட்டு பழைய மாணவர் வெற்றியீட்டினர். ஜி. தவப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (அ)

ஆண்டுவிழா

வண்ணார்பண்ணை, செவ்.

நவாலி வளர்மதி சனசமூக நிலையத்தின் ஆண்டு விழா மேற்படி நிலைய முன்றலில் கலை நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமானது. நிலையத் தலைவர் திரு. எஸ். சந்திரலிங்கம் தலைமையில் நடந்த இவ் விழாவில் நவாலியூரைச் சேர்ந்த முத்தமிழ் வித்தகர் அமரர் வி. என். வி.க்கு அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

வெள்ளி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஏ. வி. எம். ராஜன்
அன்னையும் பிதாவும்

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி - அஞ்சலிதேவி
நடித்த
வீரக்கனல்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஏ. வி. எம். ராஜன்
காஞ்சனா
வீர அபிமன்யு

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p.m.
Steeve Reeves
in
HERCULES
[illegible]
AFRICAN ELEPHANT

றியோ
(யாழ். நகர மண்டபம்)
தினசரி 10-30, 2-00
4-45, 7-15, 9-45
ஆபிரிக்காவின் இரகசியக் காடுகள்
SECRET FOREST OF AFRICA
26-7-74 முதல்
ஜிம் பிறவுண்
ஸ்லாப்டர் — SLAUGHTER

ஸ்ரீதர் சினிமா
(யாழ்ப்பாணம்)
தினசரி
10-30, 4-45, 7-00, 9-45
மக்னம் போர்ஸ்

ராணி
[யாழ்ப்பாணம்]
எம். ஜி. ஆர் ஜெயலலிதா
முத்துராமன் - நம்பியார்
தினசரி 4 காட்சிகள்
ஒரு தாய்மக்கள்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
நம்பியார் - முத்துராமன்
நடித்த
பொன்னூஞ்சல்

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
மகத்தான 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் கே. ஆர். விஜயா
சுந்தரராஜன் மனோகர்
வாயாடி
கதை, வசனம்
டைரக்ஷன்:
மதுரை மாறன்

வின்சர் யாழ்ப்பாணம்
அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்
வந்தாளே மகராசி
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-15, 9-45
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
★ ஜெயலலிதா (இரு வேடங்களில்)
★ புஷ்பலதா ★ எம். என். ராஜம்
நடித்தது
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
இயக்குநர் திலகம்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30
★ சிவாஜி ★ ஜெமினி
★ சாவித்திரி ★ ருக்மணி
★ டி. கே. சண்முகம்
நடித்த
கப்பலோட்டிய தமிழன்

லிடோ
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கந்துரி சுவந்த
(சிங்களம்)

மணிவாக்கு

இன்னா செய்யாமை திடமும் துணிவுமுடையவனின் ஓர் அறம். அது ஒழுக்கத்தில் திடமற்ற கோழை மனிதனுக்கு ஒரு மறம்.

—சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

24 - 7 - 74

மறைந்திருக்கும் மாமனிதர்

'நவ இந்தியாவின் சிற்பிகள் நாட்டின் என்ஜினியர்களே! அவர்களின் சேவை சத்தமற்ற, சக்தியுள்ள சேவை', என்று கூறியவர் காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் நேரு.

இக்கூற்று சுதந்திர இலங்கைக்குச் சாலவும் பொருத்தமானதாகும். நாட்டின் சகல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அச்சாணி போன்றவர்கள் எங்கள் எஞ்ஜினியர்களும் பொறியியல் நிபுணர்களும். அமரர் நேரு சொன்னது போல் அவர்கள் ஆற்றும் பெரும்பணி சத்தமற்றதும் சக்தியுள்ளதுமாகும்.

நிருவாக நிபுணர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் சட்டக்கலைஞர்களுக்கும் சமூகத்திலுள்ள மதிப்பு என்ஜினியர்களுக்குக் கிடைப்பதில்லை. கல்யாணமார்க்கெட்டில் என்ஜினியர்களுக்கு நல்ல 'கிராக்கி'யிருப்பதை நாம் விளக்கத்தேவையில்லை. இங்கு அவர்களுக்கு வேலை கிடைப்பது தற்போது கஷ்டமாயிருந்தாலும் உலகில் வேறெங்கும் தொழில்பார்க்கும் திறமை உடையவர்களாகையால் சீதனச் சந்தையில் அவர்களின் விலை அதிகம் இறங்குமென்று அஞ்சத் தேவையில்லை. பொறியியல் துறைக்கு கல்லூரி மாணவர்கள் கடும் போட்டி போடுவதற்கு இதுவும் ஒரு முக்கியகாரணமாகும்.

இந்தப் பெரும் பொறுப்பும் மதிப்பும் வாய்ந்த சேவைக்கு சமூகம் கௌரவம் கொடுக்கவேண்டும். அமைச்சர் பீலிக்ஸ் இதற்கு நல்ல யோசனை ஒன்று கூறியிருக்கிறார். அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைய இலங்கையின் வளர்ச்சியடையும் மாவட்டங்களுக்கு என்ஜினியர்களையே அரசாங்க அதிபர்களாக நியமிக்கவேண்டுமென்பது அமைச்சரின் ஆலோசனையாகும். நீர்ப்பாசனம் மின்சக்தி போன்ற பகிரங்கவேலைகள், மற்றைய தொழில் நுட்பவேலைகளுடன் மட்டும் நின்றுவிடாமல், உழவுக்கும் தொழிலுக்கும் அத்தியாவசியமான இயந்திரவியலைத் தொழிற்படுத்த வேண்டுமானால், பொதுமக்கள் தொடர்பு அவர்களுக்கு மிக மிக அவசியமாகும். இவ்விதத் தொடர்பு வளர்ச்சியடைந்தால், நாடு விருத்தியடைவது மட்டுமல்லாமல், நாட்டின் என்ஜினியர்களும் மக்கள் தலைவர்களாக மதிக்கப்படுவார்கள்.

இந்தப் புதிய பாதை திறக்கப்படுமளவில் நாட்டின் பொறியியல் நிபுணர்கள் கவனத்திற்கொள்ள வேண்டிய கருத்துக்கள் சிலவற்றை நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின் செயலாளர் திரு. எம். சந்திரசேன என்ஜினியர் சங்கத்துக்கு எடுத்துரைத்திருக்கிறார். தன்னலமற்ற சேவைக்கு தக்க ஊதியம் பெறும் என்ஜினியர்கள் எக்காரணம் கொண்டும் அரசுக்கோ மக்களுக்கோ தவறான ஆலோசனைகள் வழங்கப்படாதென்று அழுத்தம் தந்திருக்கிறார் திரு. சந்திரசேன. நாட்டின் தேவைக்கும், இங்கு குறைவாயிருக்கும் மனிதவளத்துக்கும் ஏற்ப இயந்திரவியலை உபயோகிக்க வேண்டும். எடுத்ததற்கெல்லாம் மேல்நாட்டு முறைகளை 'கொப்பி' அடிக்கும் பழக்கத்தை கைவிட வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார் அவர்.

தேசிய கண்ணோட்டத்தில் பொருளாதார வளர்ச்சியை நோக்கவேண்டிய பொறுப்புள்ளவர்கள் நாட்டின் பொறியியல் நிபுணர்கள். மறைந்திருக்கும் இம் மாமனிதரின் திறமைக்கு இப் புதிய பொறுப்பு பெரும் அணிகலனாகுமென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

நல்லை முருகன் உற்சவம்

இன்று ஆரம்பம்

'நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றுபவன்' முருகன்-கலியுக வரதனாகிய கந்தன் உறையும் பதிகள் இலங்கையில் பல அமைந்துள்ளன. அவற்றுள் மிக்க சிறப்புடையது நல்லையம்பதியாகும்.

இலங்கையில் தமிழர் தம் தலைநகராக விளங்கியது நல்லூர். தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த இடம் நல்லூராகும். இலங்கைத் தமிழர் வரலாற்றில் நல்லூருக்கு முதலிடமுண்டு. இவ்வாறு பூர்வீக சரித்திர வரலாற்றுப் பெருமை பொருந்திய நல்லூராகிய நல்லூரிலே கந்தன் கோயில் கொண்டு நாடுவார் குறைதீர்த்து வருவது உலகப்பிரசித்தம்.

இவ்வாலயம் மிகத் தொன்மையானது. சண்பகப் பெருமாள் என வழங்கும் ஸ்ரீ புவனேகபாகு மன்னனால் முதலில் தாபிக்கப்பட்டதாகும். இலங்கையின் ஏற்பட்ட பல்வேறு சமயப்பூசல்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து இன்று தனிச்சிறப்புடன் விளங்குகின்றது.

தன்னை மெய்யன்புடன் வழிபடும் அடியார்களின் கவலைக் கடலைக் கடியும் வடிவேல் முருகனாக விளங்குகின்றான்.

உற்சவகாலத்தில் கூடும் இலட்சக்கணக்கான அடியவர்களின் திருக்கூட்டமே இதற்குச் சாட்சி. மயில் மீதேறி, சப்பரமேறி தேரேறி முருகன் வீதிவலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இக்காட்சியைக் கண்டோர் ஆண்டுதோறும் காணத்தவறார்.

இலங்கையிலுள்ள ஆலயங்களின் நிர்வாகிகளில் நல்லூர் கந்தன் ஆலய நிர்வாகமே ஒப்பற்ற தனிச்சிறப்புடையது. பூசை ஒழுங்கு, வழிபாட்டு ஒழுங்கு, கால ஒழுங்கு என்பன மிக மிகச் சிறப்பானது. இவ்வொழுங்குகளுக்கெல்லாம் தனியொருவர் பொறுப்பாக இருப்பதை எண்ணும் போது அஃது கந்தனின் கருணையன்றி வேறில்லை.

இன்று (24-7-74) நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவம் ஆரம்பமாகின்றது. முருகன் அடியார்கள் அங்கு சென்று அவன் தரிசனம் பெற்று உய்தி பெறுவார்களாக.

'அஞ்சுமுகந்தோன்றில்
ஆறுமுகந்தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில்
வேல் தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கில்
இருகாலுந் தோன்றும்
முருகா! என்றோதுவார்
முன்'

—'நக்கீரர்'

கந்தா சுகந்தா!

பல்லவி

இராகம்: ஷண்முகப்பிரிய தாளம்: ஆதி

சரவண பவனைப் போய்க் கேள்மனமே-நல்லைச்
சண்முகக் கந்தா நீசுகந் தானன்று-(ச)

அநுபல்லவி

பிரணவ மந்திரம் பேசிய நாதனை
பெரும்படை யாறெலா மேறிய பாதனே (ச)

சரணம்

மரகத மயில்மேல் வடிவேல் கொண்டு
வள்ளிகுஞ் சரியோடு வருவதைக் கண்டு
''அரஹர ஹர''வென அஞ்சலி பாடி
அண்டியர் வீதியில் ஆனந்த பாடி (ச)

—அருட்கவி சீ. வி.

இன்று கொடியேற்றம்

மாவிட்டபுரம், செவ்.

பிரபல்யம் பெற்ற குப்பிளான் கற்கரைக்கற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று (24-ம் திகதி) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

வடபகுதி சைவாலயங்களில் பிரபல்யம்பெற்ற ஆலயங்களில் ஒன்றான மேற்படி ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தினை யொட்டி தினமும் சைவசமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்கு ஆலய பரிபாலன சபையினர் பல்வேறு சைவ அறிஞர்களை ஏற்பாடுசெய்துள்ளனர்.

வேலை இல்லை: வாலிபர் இருவர் தற்கொலை

மாவிட்டபுரம், செவ்.

வேலைகிடைக்காத விரக்தியடைந்த இருவாலிபர்கள் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டனர்.

பன்னாலையைச் சேர்ந்த சி. கணேசரத்தினசர்மா (26 வயது) பண்டத்தரிப்பைச் சேர்ந்த க. தர்மபவன் (22 வயது) ஆகியோரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவர்களாவர்.

பன்னாலையைச் சேர்ந்த சி. கணேசரத்தினசர்மாவின் மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா நடத்திய மரண விசாரணையில், மேற்படி காலமானவர் முன்பும் தற்கொலை முயற்சி மேற்கொண்டு தப்பியவரென்றும், ஜி. சி. ஈ. படித்துவிட்டு வேலையில்லாததால் விரக்தியுற்றிருந்ததாகவும் தெரியவந்தது.

தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த க. தர்மபவனின் மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை செய்த சமயம் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த காலமானவர் ஜி. சி. ஈ. படித்தும் வேலை எதுவும் கிடைக்காததால் மனமுடைந்திருந்ததாகவும், விவசாயம் செய்ய பணமில்லாததால் கவலையுடன் காணப்பட்டதாகவும் அவரது சகோதரி சமலாவதி மைத்துனர் சற்குணராசா ஆகியோர் தமது சாட்சியங்களில் தெரிவித்தனர்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்திய—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரமுகர்கள் கலரியில் அமர்ந்திருந்து பிரதமரின் பேச்சைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

கச்சதீவுப் பிரசினை, இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர்போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டது போல் இதுவரை எதுவித சாதனையும் இலங்கையின் சரித்திரத்தில் நிலைநாட்டப்படவில்லை என்று பிரதமர் கூறியபோது பேரவையில் கரகோஷம் எழுந்தது.

பிரதமர் பேசிமுடித்ததும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா எழுந்து பிரதமரின் பேச்சைப் பாராட்டிவிட்டு கச்சதீவு சம்பந்தமான உடன்படிக்கை மீது பேரவை விவாதிக்க வேண்டுமென்றும் அதற்கொரு தினத்தை ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டார்.

சமூகசேவை அமைச்சர் திரு. தென்னக்கோன் எழுந்து பிரதமருக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானம் நிறை [illegible] கேட்டார்.

சபை முதல்வர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவும் எழுந்து இப்பொழுதே விவாதிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதென்றார்கள். நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா எழுந்து விவாதிப்பதானால் இப்பொழுதே விவாதிக்கவேண்டுமென்றும் இல்லையேல் இந்த விவாதத்துக்கென தனியானதொரு பிரேரணை கொண்டுவரவேண்டுமென்றும் கூறினார்.

பின்னர் விவாதமில்லாமலே உடன்படிக்கையை சபை ஏற்றுக்கொண்டது.

யாருக்கும் வெற்றியில்லை

இந்திய ஆட்சி மன்றத்தில் கச்சதீவு சம்பந்தமான இந்திய இலங்கை உடன்படிக்கையின் பிரதியைச் சமர்ப்பித்துப் பேசிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங் இந்த உடன்படிக்கை எந்த ஒரு நாட்டுக்கும் கிடைத்த வெற்றியாகக் கருத முடியாதென்று கூறினார்.

நாடும் நடப்பும்

'சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடுவந்து சேராது' என்று ஒரு பழமொழி உண்டு.

இந்தப் பழமொழி இந்தக் காலத்தில் பொய்த்துவிட்டதென்றே சொல்ல வேண்டும்.

குடியேற்றத் திட்டங்கள், உணவு உற்பத்தித் திட்டங்கள் ஆகியவைகளில் இளைஞர்களே உஷாராக முன்னணியில் நிற்கின்றார்கள்.

பர்மாவில் மண்டலே என்று ஓர் இடமுண்டு. யாழ்ப்பாண மாவட்டத்தில் மண்டலாய் என்று ஓர் இடமிருக்கிறது. பர்மாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் என்ன தொடர்பிருக்கிறதோ எனக்குத் தெரியாது. இந்த மண்டலாய்க்குச் செல்லும் சந்தர்ப்பம் நேற்று முன் தினம் எனக்குக் கிடைத்தது.

மண்டலாய் இயக்கச்சிக்கும் ஆழியவளைக்கும் இடையிலிருக்கிறது. நல்ல மணல் பிரதேசம். போக்குவரத்து வசதிகள் கொஞ்சம் குறைவு தான்.

மண்டலாயில் குடிசனம் குறைவு. அழகான பிள்ளையார் கோயில் ஒன்றிருக்கிறது. அந்தக் கோவிலுக்கு ஒரு பூசகர் இருக்கிறார். அவர் ஐம்பத்தேழு வருடங்களாக அந்தப் பிள்ளையாருக்குப் பூசை செய்து வருகிறாராம். பூணூல் இல்லை. திருமுறைகளைப் பாடியே பூசை செய்கிறார்.

பளை பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி திரு. மார்க்கண்டு அந்தக் கோயிலைப் பற்றிக் கதைகதையாகச் சொன்னார். சீதையைத் தேடி இராமபிரான் இலங்கைக்கு வந்தபோது மண்டலாயில் தங்கியிருந்தாராம். அந்த இடத்தில் தான் இந்தப் பிள்ளையார் கோயில் இருக்கிறதாம். பிள்ளையாருக்குத் தம்பிக்கை ஆழ்வார் என்றும் ஒரு பெயர்.

காரியாதிகாரி திரு. மார்க்கண்டு ஓர் இளைஞர். சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் உள்ளவர். மண்டலாயில் அத்துமீறி குடியேறிய காணிகளைக் கண்டுபிடித்து அங்கு இளைஞர்களைக் குடியேற்றவேண்டுமென்று ஆவலாக உழைத்து வருபவர் அவர்.

யாழ்ப்பாண மாவட்டக் காணி அதிகாரி திரு. சம்பந்தன் ஆரவாரமில்லாமல் அமைதியாகப் பணிபுரிபவர். திரு. சம்பந்தரும் திரு. மார்க்கண்டுவும் மண்டலாயில் இளைஞர்களைக் குடியேற்றி பழமை வாய்ந்த அந்த ஊருக்குப் புதுமெருகு ஊட்ட முனைகின்றனர்.

அவர்களின் முயற்சி வெற்றிபெற மண்டலாய்ப் பிள்ளையார் அருள்வாராக!

0 0

உரும்பராய் கிழக்கிலிருந்து செல்விகள் ஆ. செல்வநாயகியும், ஆ. சிவயோகமும் எழுதியுள்ள கடிதமொன்றில் மறைந்த கலைமேதை வி. என். பி. பற்றி 'ஈழநாடு' வெளியிட்ட கட்டுரைகளுக்கு நன்றி தெரிவித்திருப்பதுடன் வி. என். பி. என்ற மூன்றெழுத்து பல கோணங்களிலிருந்து எழுதி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டு இப்படித் துயரக்கடலில் தள்ளிவிடுமென்று எதிர்பார்க்கவில்லையென்று குறிப்பிட்டுள்ளனர்.

ஊர் சுற்றி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஜூலை 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu P. O. Box No. 49, Jaffna. [illegible]
[illegible] Telephone: 389